**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**
**தேனாம்பேட்டை, சென்னை – 18.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.02/ 2021–2022 நாள்: 13.01.2022.**

**இரு உறை முறை – 04 பணிகள்**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் அட்டவணையில் உள்ள விவரப்படி குறிப்பிடப்பட்ட நாளில் மாலை 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோட்டம் வாரியாக வரையறுக்கப்பட்ட செயற்பொறியாளரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் தாட்கோ தலைமை அலுவலகத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் முற்பகல் 11.00 மணியளவில் நேரில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் (அல்லது) உரிய Authorisation கடிதத்துடன் வரும் அவர்களது முகவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அரசாணை எண் 81/ ஆதி(ம)பகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ ஒன்றிய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவற்றில் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டடப் பணியில் அனுபவமுள்ள முதல் அழைப்பாக இருந்தால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்ததாரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். இரண்டாம் மற்றும் அதற்குமேற்பட்ட அழைப்புகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்களுடன் ஏனைய ஒப்பந்ததாரர்களும் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் நடப்பாண்டு 2021 – 2022 நிலையில் ஒப்பந்தப் பதிவு பெறாத ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முடியாது. ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள பணிகளுக்கு தாட்கோவில் மாநிலத்தில் எந்த கோட்டத்தில் முதல் வகுப்பில் பதிவு செய்திருந்தாலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்கள் மட்டும் பங்கேற்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் உரிய சான்றிதழ்களுடன் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான தொகையினைச்செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"Tender form can be downloaded free of cost from www.tenders.tn.gov.in"

| வ. எண் | மாவட்டம் | இடம் | பணி விவரம் | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை (ரூபாய்) | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் (சரக்கு மற்றும் சேவை வரி) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் கட்டுமானப் பணி ( முதல் அழைப்பு) – 04** | | | | | | | |
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | டாக்டர் அம்பேத்கர் கல்லூரி மாணவர் விடுதி கட்டுமானப் பணி (150 மாணவர்கள்) | 12 மாதங்கள் | 143500 | முதல் வகுப்பு | 15000 + 2700 |
| 2 | நாமக்கல் | இராசிபுரம் | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி கட்டுமானப் பணி (150 மாணவியர்கள்) | 12 மாதங்கள் | 149000 | முதல் வகுப்பு | 15000 + 2700 |
| 3 | நாமக்கல் | சேந்தமங்கலம் | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி கட்டுமானப் பணி (100 மாணவியர்கள்) | 9 மாதங்கள் | 110500 | முதல் வகுப்பு | 15000 + 2700 |

| வ. எண் | மாவட்டம் | இடம் | பணி விவரம் | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை (ரூபாய்) | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் (சரக்கு மற்றும் சேவை வரி) |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | நாமக்கல் | முள்ளுகுறிச்சி | பழங்குடியினர் நல மாணவர் விடுதி கட்டுமானப்பணி (300 மாணவர்கள்) | 15 மாதங்கள் | 205500 | முதல் வகுப்பு | 15000 + 2700 |

**முன்வைப்புத் தொகை வரவு வைக்கப்பட வேண்டிய விவரம்**

| | | |
|---|---|---|
| வ. எண்: 1 | செயற்பொறியாளர், தாட்கோ, கோயம்புத்தூர் | 1 |
| வ. எண்: 2,3 மற்றும் 4 | செயற்பொறியாளர், தாட்கோ, சேலம் | 3 |
| | **மொத்தம்** | **4** |

ஒப்பந்தப்புள்ளிபடிவம் கிடைக்குமிடம் : **www.tenders.tn.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் (அ) சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர், கோட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளிபடிவத்தின் விற்பனைக் காலம் : **(இணையதளம் மூலம் மற்றும் சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகங்களில்)** | 24.01.2022 முதல் 07.03.2022 வரை | மாலை 5.45 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: **(சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகம்)** | 08.03.2022 | மாலை 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழுவினரால் திறக்கப்படும் நாள் **(தாட்கோ, தலைமை அலுவலகம்)** | 09.03.2022 | முற்பகல் 11.00 மணியளவு |

பொது மேலாளர்(தொ.நு.)

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
## தேனாம்பேட்டை, சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 02/2021 – 22 / நாள். .01.2022.

இரு உறைகள் முறை – 04 பணிகள்

---

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் இணைப்பில் உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதாவது 08.03.2022 தேதியில் சம்மந்தப்பட்ட தாட்கோ செயற்பொறியாளர் அலுவலகத்தில் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்.

இரு உறைகள் முறை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. உறை 1–ல் விண்ணப்பதாரர்கள் தகுதிகாண் விவரங்கள் மற்றும் முன் வைப்புத் தொகையை வைத்து மூடி முத்திரையிட்டு, **உறையின் மீது தகுதிகாண் விவரம் மற்றும் முன்வைப்பு தொகை என குறிப்பிட்டும்,**
2. உறை 2–ல் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தை வைத்து மூடி முத்திரையிட்டு **உறையின் மீது விலைப்புள்ளி ஒப்பந்தப்படிவம் என குறிப்பிட்டும்** இவ்விரு உறைகளையும் ஒரு **பெரிய உறையில்** வைத்து மூடி முத்திரையிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்படாமல் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

3. மேலே குறிப்பிட்டப்படி மூடி முத்திரையிடப்பட்ட இரு உறைகள் அடங்கிய **பெரிய உறை 08.03.2022** அன்று பிற்பகல் **3.00** மணி (அலுவலக நேரங்காட்டியின்படி) வரை மட்டும் தொடர்புடைய கோட்ட செயற்பொறியாளர் அவர்களால் மட்டும் பெற்றுக் கொள்ளப்படும்.
4. (அ) பூர்த்தி செய்யப்பட்ட உறை –1 இல் தகுதிகாண் படிவம் என குறிப்பிடப்பட்ட உறை மட்டுமே 09.03.2022 அன்று முற்பகல் 11.00 மணியளவில் (அலுவலக நேரங்காட்டியின்படி) ஒப்பந்த குழுமத்தினரால், ஒப்பந்தப்புள்ளி சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

   (ஆ) அவ்வாறு திறக்கப்பட்ட உறை 1– இல் உள்ள பூர்த்தி செய்யப்பட்ட தகுதிகாண் படிவம் மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியவை தகுதியானவை அல்லது தகுதியில்லாதவை என்கின்ற அடிப்படையில் தேர்வு செய்யப்படும். பங்கேற்ற ஒப்பந்ததாரர்களின் தகுதி மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியன தகுதிகாண் படிவத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

(இ) அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் உறை–2 விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் திறக்கப்படும் தேதி பற்றிய முன் அறிவிப்பு செய்யப்பட்டு உரிய தேதி மற்றும் நேரத்தில் ஒப்பந்தக் குழுமத்தினரால் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். தகுதி பெறப்படாத ஒப்பந்ததாரர்களின் உறை–2 (விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி படிவம்) திறக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

5. பெறப்பட்ட இரு உறைகள் முறை ஒப்பந்தப்புள்ளிகளை எக்காரணமும் தெரிவிக்காமல் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தாட்கோ நிறுவனத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

6. <u>தகுதி பெறத் தேவையான அடிப்படை வரையறைகள் :</u>

அ) விண்ணப்பதாரர் / நிறுவனம் அதே பெயரில் குறைந்த பட்சம் கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து கட்டுமானப் பணிகளை நல்ல முறையில் நிறைவேற்றி வருபவராக இருத்தல் வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரர் / நிறுவனம் விதிமுறைகளின் கீழ் முதல் வகுப்பில் ரூ.75.00 இலட்சத்திற்கு மேல் பண வரம்புடன் முதல் வகுப்பில் ஒப்பந்ததாரராக பதிவு பெற்றிருத்தல் இருத்தல் வேண்டும்.

இ) விண்ணப்பதாரர் / நிறுவனம் ரூ. 30.00 இலட்சத்திற்கு குறைவில்லாத மதிப்புள்ள அசையா சொத்துக்களுக்கு உரிமையாளர் என்பதற்கான செல்நிலைச் சான்றிதழ் சம்மந்தப்பட்ட வருவாய்த்துறை வட்டாட்சியரால் மூன்று வருடங்களுக்குள் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். சொத்தின் மீது வில்லங்கம் ஏதுமில்லை என்பதற்கான சான்றிதழை சொத்து மதிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 23.01.2022 வரை பெற்று தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும்.

ஈ) ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விண்ணப்பதாரர் / நிறுவனம் கடந்த ஐந்தாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட தொகைக்கு (பணியின் மதிப்பு + GST வரி உட்பட) ஒத்த தன்மையிலான (Single Agreement) கட்டடப் பணியினை அரசு அல்லது அரசு சார் நிறுவனங்கள் தனிவொரு உடன்படிக்கையின் கீழ் நல்ல முறையில் செய்து முடித்திருத்தல் வேண்டும். சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை இணைத்திருக்க வேண்டும். **தவறும்பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படாது.**

**(முதல் வகுப்பு பதிவு ஒப்பந்ததாரர்களுக்கான பணிநிபந்தனைகள்)**

| பணி இலக்க எண் | Single Agreement Work மதிப்பு (ரூ. இலட்சம்) |
|---|---|
| 1 | 133.24 |
| 2 | 138.98 |
| 3 | 100.31 |
| 4 | 195.46 |

உ) ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விண்ணப்பதாரர்/ நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் வருடாந்திர கூட்டு நிதி பரிவர்த்தனை (Cumulative Financial Turn over) (பணியின் மொத்த மதிப்பு வரி உட்பட) கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிட்ட தொகைக்கு குறையாமல் அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டவராக விண்ணப்பதாரர் / நிறுவனம் இருத்தல் வேண்டும். இது சம்மந்தமான சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும். **தவறும்பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படாது.**

**(முதல் வகுப்பு பதிவு ஒப்பந்ததாரர்களுக்கான பணிநிபந்தனைகள்)**

| பணி இலக்க எண் | ஆண்டு நிதி பரிவர்த்தனை (Annual Financial Turnover) மதிப்பு (ரூ. இலட்சம்) |
|---|---|
| 1 | 399.72 |
| 2 | 416.94 |
| 3 | 300.93 |
| 4 | 586.38 |

ஊ) தகுதிகாண் படிவம் மற்றும் விலை விகித ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி அனுப்பும் கடிதத்துடன் ஒப்பந்ததாரராக பதிவு பெற்றமைக்கான சான்று, ஒத்த தன்மையிலான பணிகளில் பெற்ற முன் அனுபவத்திற்கான சான்றுகள், வருமான வரி கணக்கு செலுத்தியமைக்கான அத்தாட்சி, GST பதிவு சான்றிதழ், நடப்பு காலத்திற்கான வரி நிலுவையில்லை / சரிபார்க்கப்பட்டமைக்கான சான்று ஆகியன தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.

ஏ) தாட்கோவில் நடப்பாண்டு 2021 – 2022 நிலையில் ஒப்பந்தப் பதிவு பெறாத ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முடியாது.

ஏ) மேற்படி பணிகளுக்கு தாட்கோவில் எந்தவொரு கோட்டத்திலும் முதல் வகுப்பில் பதிவு செய்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்ததாரர்கள் இரட்டை உறை ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டப்பட்டுள்ள தகுதிகாண் சான்று உள்ளவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

7. அரசாணை எண் 81/ ஆதி (ம) பகுநலத்துறை/ நாள் 10.09.2011 இன்படி தாட்கோ, தமிழக அரசு துறைகள் / நிறுவனங்கள்/ ஒன்றிய அரசு துறைகள் / நிறுவனங்கள், ஆகியவற்றில் பதிவு செய்துள்ள மற்றும் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டடப் பணியில் அனுபவமுள்ளவர்கள்முதல் அழைப்பாக இருந்தால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். இரண்டாம் மற்றும் அதற்குமேற்பட்ட அழைப்புகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்களுடன் ஏனைய ஒப்பந்ததாரர்களும் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் நடப்பாண்டு 2021– 2022 நிலையில் ஒப்பந்தப் பதிவு பெறாத ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முடியாது.

8. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட கோட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து பணிகளின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்படிவத்திற்கான தொகை செலுத்தி அட்டவணையில் உள்ள விற்பனை காலத்திற்குள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்டப்பட்டுள்ள தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒப்பந்ததாரர் பொறுப்பாகும். குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குபின் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி வரும் விண்ணப்பம் செயற்பொறியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

9. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தபாலில் அனுப்பப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற நிர்ணயிக்கப்பட்ட விற்பனை மற்றும் பெற்றுக் கொள்ள கடைசி நாள் ஏதாவது ஒரு காரணத்தால் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி படிவம் அதற்கு அடுத்த பணி நாளில் விற்பனை செய்து மறுநாள் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். பூர்த்தி செய்யப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவு அஞ்சல் மூலமாகவும் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

10. பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வந்து சேருதல் வேண்டும். காலதாமதத்திற்கு தாட்கோ பொறுப்பேற்காது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கப்படாமல் முகவருக்கே திருப்பி அனுப்பப்படும்.

11. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ரூபாய்) இணைப்பில் உள்ளவாறு ரொக்கமாக, ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பத்துடன் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் பத்தி 13–ல் உள்ள ஆவணங்களை சரிபார்த்து ஒப்புதல் அளித்த பின்னரே, ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான கட்டணம் சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணம் எக்காரணத்திற்காகவும் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது.

12. டேவணித் தொகை (முன் வைப்புத் தொகை) ரூபாய் இணைப்பில் உள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட தாட்கோ செயற் பொறியாளர்கள் மாற்றத் தக்க வகையில் கேட்பு வரைவோலை அல்லது தேசிய சேமிப்பு பத்திரமாகவோ அல்லது டெபாசிட்டாகவோ இருத்தல் வேண்டும். டெபாசிட்டாக இருப்பின் (Revenue stamps) முத்திரை வில்லையில் கையொப்பமிட்டு செயற்பொறியாளர் மாற்றத்தக்க வகையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். இத்தொகை தொடர்புடைய செயற் பொறியாளர், தாட்கோ அவர்கள் எடுக்கத் தக்க வகையில் செலுத்தவேண்டும். டேவணித் தொகை குறைவாக செலுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். டேவணித் தொகை ரொக்கமாக செலுத்துதல் ஏற்கப்படமாட்டாது. வங்கி கேரண்டி எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டேவணித் தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படுவதுடன், ஒப்பந்ததாரர் மீது ஒப்பந்த விதிகளின்படி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும்போது முந்தைய செயல்முறை, செய்து முடித்திருக்கும் வேலையின் தன்மை மற்றும் மதிப்புத் தொகை, ஒப்பந்ததாரர் பதிவு சான்றிதழ் மற்றும் நடப்பாண்டு பதிவு புதுப்பித்ததற்கான சான்று, மின்பணி செய்வதற்கான ‘பி‘ அல்லது ‘சி‘ உரிமம் பெற்ற நபரின் சான்றிதழ் , சரக்கு மற்றும் சேவைவரி சான்று ஆகியவற்றை விண்ணப்பத்துடன் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி சான்றிதழ்களை சரிபார்த்த

பிறகே ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற் பொறியாளர் அவர்களால் வழங்கப்படும். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பம் பெறப்படாத பதிவுகளுடன் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.ஒப்பந்தப்புள்ளி இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் (Downloaded from internet) செய்து சமர்ப்பிக்கும்போது கீழ்கண்ட ஆவணங்கள் அனைத்தும் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவை 1) Solvency Certificate, 2) Income Tax return filed copy, 3) GST return filed copy,4) Experience Certificate, 5) Labour Employment Certificate, 6) Machineries & Plant ownership invoice / lease deed certificate, 7) Single Building certificate (as mentioned in S.No.09), 8) Annual Turnover Certificate(as mentioned in S.No.10), 9) வங்கி CC limit கடிதம்.

14. மேலும், இவ்வொப்பந்தப்புள்ளி அழைப்பில் கோரப்படும் பணியினை ஒப்பந்தக்காலத்திற்குள் முடித்தல் வேண்டும்.
15. ஒப்பந்ததாரர் செய்யும் பணியின் மதிப்பீட்டுத் தொகைக்கு ஏற்றவாறு பணி அமர்த்தியுள்ள அலுவலர்கள் பெயர், கல்வி தகுதிக்காண் சான்றிதழ்கள் மற்றும் பணியை மேற்பார்வையிடுவதற்கான ஒப்புதல் கடிதம் ஆகியவற்றுடன் மேற்கண்ட விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
16. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை முழுமையாக படித்து பூர்த்தி செய்து, ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட வேண்டும்.அதே போன்று அனைத்து இணைப்பு சான்றுகளிலும் Self attestation(சுய சான்றளிக்கப்பட்ட கையொப்பம்) இட வேண்டும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் நிராகரிக்கப்படும்.
17. ஒப்பந்தப்புள்ளியுடன் இது வரை மேற்கொண்ட பணிகளின் விவரங்கள் பணி தொடங்கிய நாள் பணி முடிவடைந்த நாள் ஆகியவற்றினை பட்டியலிட்டும் மேலும் தற்போது ஏதேனும் பணி செய்யப்படுமேயாயின் அப்பணியின் பெயர், பணி தொடங்கிய நாள், பணி முடிவடைய வேண்டிய நாள், தற்போதைய நிலை ஆகியனவற்றை பட்டியலிட்டும் இணைக்கப்பட வேண்டும்.
18. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு முன் கட்டுமானத்திற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்களின் தேவை அளவு மற்றும் கிடைக்குமிடம் ஆகியவற்றினை உறுதி செய்து கொண்டு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.
19. ஏற்கனவே பணி ஒப்பந்தம் இரத்து ஆனவர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படாது.

20. ஒப்பந்தப்புள்ளி தேதி நிலையில் ஒப்பந்ததாரர் பதிவு நிலையில் இல்லாதது, பணித்திறன் குறைவாக அல்லது திருப்திகரமாக இல்லாதது, நிதித்திறன் குறைவானவரது ஒப்பந்தப்புள்ளிகளும் பரிசீலிக்கப்படாது.

21. **ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கும் ஒரு ஒப்பந்ததாரர் இரண்டு பணிகளுக்கு மேல் பங்கேற்க கூடாது. மூன்றாம் பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கும்பட்சத்தில் ஒப்பந்ததாரரின் முன் அனுபவம் ,பணித்திறன், நிதித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் பணி வழங்குதல் குறித்து முடிவு செய்யப்படும்.**

22. **இரட்டை உறை முறை ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் தாட்கோவில் மாநிலத்தில் எந்த கோட்டத்தில் முதல் வகுப்பில் பதிவு செய்திருந்தாலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்ததாரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி தகுதி உள்ளவராயிருப்பின் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.**

<u>இணைப்பு:</u> பணிகளின் விவர அட்டவணை.

13/1/22

மேலாண்மை இயக்குநர்.

பெறுநர்

தாட்கோ ஒப்பந்தந்ததாரர்கள் (பட்டியல்படி.)
(சம்மந்தப்பட்ட கோட்டம் மூலமாக)

நகல் :

| | |
|---|---|
| 1 | மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 2 | தலைவர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக. |
| 3 | அரசுமுதன்மை செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9 அவர்களுக்கு தகவலுக்காக |
| 4 | ஆணையர்,,ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக. |
| 5 | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக. |
| 6 | இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக. |
| 7 | பொது மேலாளர் (நிர்வாகம்) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக. |
| 8 | பொதுமேலாளர் (வளர்ச்சி) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக. |
| 9 | நிதிஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ அவர்களுக்கு தகவலுக்காக. |
| 10 | அனைத்துக் கோட்ட செயற்பொறியாளர்கள். |
| 11 | அறிவிப்புப் பலகைக்கு. |